வென்றது யார்?

(சரஸ்வதி மஹால் சம்பந்தமான
கி. பி. 1773ம் வருஷத்திய சரித்திர வரலாற்றைத்தழுவியது)

இரு காட்சி சிறு நாடகம்.

ஆங்கிலத்தினின்றும் மொழிபெயர்க்கப்பட்டது.

ஆசிரியர் :
தஞ்சை சரஸ்வதி மஹால் கௌரவ காரியதரிசி
ஸ்ரீ S. கோபாலன், B. A., B. L.

மொழிபெயர்ப்பாளர்
தஞ்சை சரஸ்வதி மஹால் மகாராஷ்டிர பண்டிட்
ஸ்ரீ G. நாகராஜ ராவ்

1955

வென்றது யார்?

கி. பி. 1773ம் வருஷத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் சேனைகளும் கர்நாடக நவாபின் சேனைகளும் ஒன்று சேர்ந்து தஞ்சையைத் தாக்கின. ஆங்கிலேயர்களுடைய சேனையை ஜனரல் ஸ்மீத் நடத்தி வந்தார். முகம்மதிய சேனைக்கு நவாபின் கடைசி குமாரன் ஓம் தத்துல் உம்ரா தளபதி. நீண்ட நாள் முற்றுகைக்குப் பின் தஞ்சை, பகைவரின் வசமாயிற்று. அரசர் துளஜா மகாராஜா கைதியானார். மறுநாள் பகைவர்கள் ஸரஸ்வதி மகால் நூல் நிலயத்தை வெடிமருந்துச் சாலையாக்க யோசிக்கலாயினர். வெளியே நடக்கும் சம்பவங்கள் யாவும் தெரிந்திருந்தும் சரஸ்வதி மகால் அதிகாரி பண்டிட் தாதாராவ் தன்னுடைய சிப்பந்திகளோடு நூல்நிலய அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். அழகான தோற்றமும் நடுத்தர வயதுமுடைய தாதாராவின் தலைப்பாகை மராட்டிய பாணியில் பிரகாசிக்கிறது. அவர் தன் பரந்த நெற்றியில் சந்தனப் பொட்டுடன் உலாவிக் கொண்டே தன் சிப்பந்திகளின் வேலையை மேற்பார்வையிடுகிறார். நூல் நிலயத்தில் சாய்ந்த மேஜைகளுக்கெதிரில் வித்வான்கள் இரு வரிசையாக உட்கார்ந்து கொண்டு சுவடிகளைப் படிப்பதும், குறிப்புக்களை எடுப்பதும், எழுதுவதுமாக இருக்கிறார்கள். அப்பொழுது,

தாதாராவ் :—என்ன ராமராவ்! வேலைக்கு வந்த விஷயத்தில் ரொம்ப சந்தோஷம். உடம்பு சௌக்கியந்தானே! நீங்கள் வராததால் இந்த ஸம்ஸ்கிருத மூட்டைகள் ஏங்கியிருந்தன. இப்பொழுது அன்புடன் உம்மை வரவேற்கின்றன.

ராமராவ் :—(*நமஸ்கரித்து*) ஆம். உடம்பு சௌக்கியமாக இருக்கிறது.

தாதாராவ் :—சரி. சுமார் ஒரு மாதத்திற்கு முன் காஷ்மீர் மகாராஜா நகல் ஒன்று கேட்டிருந்தாரே! இனி அதை முடித்து விடலாம். எது வரையில் அதை எழுதியிருக்கிறீர்கள்?

ராமராவ் ;—(*நகலின் கடைசி பக்கத்தை வாசிக்கிறார்*) "மன்னர்களும் வீரர்களும் நீர்க்குமிழி போன்றவர்கள். ராஜ்யங்களும் வெற்றிகளும் வெகு சீக்கிரத்தில் மறந்துபோகக் கூடியவை. சாம்ராஜ்யங்கள் தோன்றி மறையக் கூடியவை. எல்லாம் நிலையற்றவை. ஆனால் கலைவாணி அன்னை சரஸ்வதி தேவியின் வெற்றிகள் மட்டும் அழிவே இல்லாதவை. என்றென்றும் நிலைத்திருப்பவை".

தாதாராவ் :—ஆஹா! எவ்வளவு கண்ணியமான வார்த்தைகள்! இன்றைய சம்பவத்திற்குத் தகுந்தாற்போல் அமைந்திருக்கின்றன. இன்றே நகலை முடித்துவிடுங்கள்.

ராமராவ் :—நன்றாயிருக்கிறது. யாராலாவது இன்று வேலை செய்ய முடியுமா என்ன! பண்டிட்ஜீ! என் நெஞ்சம் துடிக்கிறது. விரல்கள் நடுங்குகின்றன.

பகைவர்கள் நம் ஊரைக் கைப்பற்றி விட்டார்கள். தெருக்களில் வெள்ளையர்கள் பாரா நிற்கிறார்கள். நவாபின் கொடி கோட்டை மேல் பறக்கிறது—நமது அரசரோ கைதி. (ஆவேசமுறுகிறார். எல்லோரும் அவரைச்சுற்றிக் கூடுகிறார்கள்)

தாதாராவ் :—ஆமாம். அதனால் நமக்காவதென்ன! சற்றுமுன் படித்த வார்த்தைகளை மறந்து விட்டீரா! பேஷ்! வெற்றியும் தோல்வியும் நம்மை பாதிக்காது. தேவி சரஸ்வதியின் வெற்றிதான் உண்மையான வெற்றி.

அப்பையா தீக்ஷிதர் :— (வித்வான்களெனப் பிரசித்திபெற்ற தீக்ஷிதர் வமிசத்தில் பிறந்தவர்) அதனால், நம் கண்முன் நடப்பவைகளை அசட்டை செய்யலாமா என்ன! அப்படி நாம் அலக்ஷியமாக இருந்தாலும் எதிரிகள் நம்மைச் சும்மா விடுவார்களா!

தாதாராவ் :—அப்பைய்யா! நீயுமா இப்படி!...உன் முன்னோர்கள் யுத்தம் நடந்து கொண்டிருக்கும் பொழுதே பல அரிய நூல்களை எழுதியிருக்கிறார்கள். அது உனக்குத் தெரியாதா! அப்பைய்யா! நம்முடைய நாட்டில் அநேக சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஒவ்வொரு 150 வருஷங்களின் முடிவிலும் இந்தத் தஞ்சாவூரில் அன்னியர்கள் தோன்றுவார்கள். அவர்கள் என்ன நினைப்பார்கள்...... நாம் தஞ்சாவூரை ஜெயித்து விட்டோம் என்று மார்தட்டிப் பேசுவார்கள். ஆனால் முடிவு என்ன? அவர்களை எல்லாம் வாணிதேவி வென்றுவிடுவாள். சோழர்கள் வந்தபொழுது நம் முன்னோர்கள் தங்களுடைய கல்வியும் கலையும் ஒழிந்ததென்று கைகளை விரித்து வருத்தப்பட்டார்கள். ஆனால் சோழர்களில் கீர்த்தி மிகுந்த அரசனே அன்னையின் முன் மண்டியிட்டு அவளுடைய ஆணையை சிரமேற்கொண்டான். நம்மைச் சுற்றியுள்ள சுவடிகளில் ஒரு பகுதி அந்த ஆணையின் பயன்தான். இதோ இருக்கிறாரே நம்முடைய பழைய தமிழ்ப் பண்டிதர் உலகநாத பிள்ளை—அவருக்கு நன்றாகத் தெரியும்.

உலகநாத பிள்ளை :—அதிலென்ன சந்தேகம்! நமக்கென சோழர்கள் விட்டுச் சென்ற அரிய நூல்கள் ஒன்றா இரண்டா! அப்பப்பா! எவ்வளவு சிறந்த நூல்கள்! கம்பராமாயணம், ஒட்டக்கூத்தருடைய குலோத்துங்க சோழன் உலா, ஏர் எழுபது, அம்பிகாபதிக்கோவை, பெரிய புராணம் இன்னும் எவ்வளவோ!

தாதாராவ் ;—நம்மிடமிருப்பது கலைப்பொக்கிஷம். செல்வப்பொக்கிஷம் அல்ல!......உண்மையில் நினைத்துப் பார்க்கும்போது எனக்கு மயிர்க்கூச்சல் எடுக்கிறது. சோழர்கள் மட்டுமா? அவர்களுக்குப்பின் வந்த நாயக்கர்களும் அப்படியே!......நம் நாட்டில் அவர்கள் நுழைந்தபோது அப்போதிருந்த சோழ அரசன் என்ன செய்தான் தெரியுமா! ராஜ்யம், செல்வம், முன்னோரின் புகழ் எல்லாமே மறந்து இந்தக் கலைப் பொக்கிஷத்தைக் காப்பதற்காக நேருக்கு நேர் நின்று எதிரிகளோடு சண்டையிட்டான். முடிவில் நாயக்கர்கள் வென்றார்

கள். ஆனல் அவர்களையும் சரஸ்வதி ஜெயித்து விட்டாள். நமது மகாலில் அன்னையின் வெற்றிச்சின்னங்கள் எங்கும் நிறைந்திருக்கின்றன. நாற்பது வருஷ அனுபவம் மிகுந்த வெங்கடமகிக்குத் தெரியும் அவை எப்பேர்ப்பட்டவை என்று!

வெங்கடமகி:—(தெலுங்கு வித்வான்) நாயக்க மன்னர்கள் கலை வளர்ச்சிக்காக எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்கள்! கோவிந்த தீக்ஷிதருடைய சங்கீத சுதா ஒருபுறம் நம்மை அழைக்க யக்ஞநாராயண தீக்ஷிதருடைய ஸாஹித்ய ரத்னாகரமும் ரகுநாதவிலாஸநாடகமும் மற்றொரு புறம் கூப்பிடுகின்றன. ராமபத்ராம்பாவின் ரகுநாதாப்யுதயமும் மன்னாருதேவரின் விஜயராகவாப்யுதயமும் எவ்வளவு சிறந்த காவியங்கள்! ஆஹா!

தாதாராவ்:—உண்மையில் அரசர்கள் எல்லாம் தங்களுடைய நிலையற்ற சாம்ராஜ்யத்தைவிட்டு அறிவு சாம்ராஜ்யத்தையே விரும்பவேண்டும். வெங்கடா! சற்றுமுன் மன்னாருவைப்பற்றி சொன்னீரல்லவா! அந்த மன்னாரு சாமானியனா என்ன! மிகுந்த புத்திசாலி! ஆனல் அவன் காதலில் ஈடுபட்டான். மந்திரி கோவிந்த தீக்ஷிதருடைய மகளைக் காதலித்தான். இதை அறிந்த தீக்ஷிதர் அரசரிடம் புகார் செய்யவே விஜய ராகவன் தன் மகனைச் சிறையிலிட்டான். மன்னாரு சிறை புகுமுன் தன் தந்தையிடம் தன்னைத் தினமும் சரஸ்வதி மகாலுக்குச் சென்று அங்குள்ள நூல்களைப் படிக்க அனுமதி கேட்டான். அரசனும் அனுமதி அளித்தான். அப்பொழுது எழுதியது தான் இந்த விஜயராகவாப்யுதயம்.

வெங்கடமகி:—ஏன்! மன்னாரு ஒரு பெரிய போர் வீரன்! யுத்தத்தில்தான் அவன் இறந்தான்.

தாதாராவ்:—உண்மை! உண்மை! மதுரை சொக்கநாத நாயகர் நம்மூரின் மீது படையெடுத்து வந்தபோது தன் தந்தையோடு போர்க்களத்திற்குச் சென்றான். சண்டையில் இருவரும் மடிந்தனர். சண்டைக்குப் புறப்படும் முன்பு தான் அந்தப் புத்தகத்தின் கடைசி வரியை எழுதி முடித்தான்.

ராமராவ்:—(தெளிந்து) தேவி சரஸ்வதியின் உண்மையான மகன்.

தாதாராவ்:—ஆம். பிறகு தான் சத்ரபதி சிவாஜியின் தம்பி ஏகோஜி இங்கே வந்து மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார். அப்பொழுதும் ஜனங்கள் அலறினார்கள் — எங்கே நாயக்கர்கள் விட்டுச் சென்ற கலைச் செல்வத்தை பேராசை மிகுந்த மராட்டியர்கள் அழித்து விடுவார்களோ என்று — அவர்களையும் அன்னை ஜெயித்து விட்டாள் — (சுற்றிலும் காண்பித்து) இவையெல்லாம் மராட்டியர்கள் அன்னைக்கு அளித்த காணிக்கைகள்.

ராமராவ் :—அந்த காணிக்கைகளைக் கணக்கிடவே முடியாது. மராட்டிய அரசர்களும் வித்வான்களும் நமக்கு அளித்த அரிய நூல்கள் எண்ணற்றவை. ஸம்ஸ்கிருதம், மராத்தி, தெலுங்கு, தமிழ் முதலிய பல பாஷைகளில் சங்கீதம், வைத்தியம், கலை, இலக்கியம் சம்பந்தமான அநேக நூல்களைக் காண்கிறோம். திரயம்பகராய மகியின் தர்மாகூதம், ரகுநாத பந்தின் தர்மார்த்தஸிந்து, போஜன குதூகலம் இவையெல்லாம் எவ்வளவு சிறந்த கிரந்தங்கள்! துளஜா ராஜாவின் தன்வந்தரி விலாஸமும் சங்கீத சாராம்ருதமும் அப்படியே.

தாதாராவ்:—அப்படியிருக்க ஏன் நாம் பயப்பட வேண்டும். அநேக நவாபுகளும் வெள்ளையர்களும் வருவார்கள், போவார்கள், ஜயிப்பார்கள், தோற்பார்கள். ஆனால் எல்லோரையும் ஜெயிக்கக்கூடியவள் அன்னை சரஸ்வதி ஒருவர்தான். உலகத்தையே ஜயிக்கக் கூடியவர்களானாலும் அவர்களையும் ஜெயித்து விடுவாள் (**துளஜா ராஜாவிடமிருந்து ஒரு சேவகன் பிரவேசிக்கிறான்**) யாரது!

சேவகன் :—பண்டிட் தாதாராவிடம் ஒரு சேதி சொல்ல வேண்டும். மகாராஜாவின் உத்திரவு.

தாதாராவ் :—என்ன சமாசாரம்?

சேவகன் :—சுவாமி! நமது மகாராஜா கைதி. அவரைத் திருச்சிராப்பள்ளிக்குக் கொண்டு போகிறார்கள். நானும் ராஜா பின்னாடியே போனேன். மகாராஜா என்னைக் கிட்டே அழைத்து (பெருமூச்சு) மகராஜா !......... (மௌனம் திணறல்) ...... அவர் இராணிமார்களுக்கோ சனங்களுக்கோ ஒன்றும் சொல்லியனுப்ப வில்லை. "ஓடு! ஓடு! தாதாராவிடம் உடனே ஓடிப்போய் எதிரிகள் சரஸ்வதி மகாலை வெடிமருந்துச் சாலையாக்கப் போகிறார்களாம். அங்கிருக்கும் சுவடிகளையும் புத்தகங்களையும் பத்திரப்படுத்தும்படி நான் சொன்னதாகச் சொல்" என்றார்.

தாதாராவ் :—என்ன பெருந்தன்மை! அரசர் என்றால் அவருக்கே தகும்.

சேவகன் :—சுவாமி! சீக்கிரப்படுத்துங்கள். எதிரிகள் இப்பொழுதே வரப்போகிறார்கள். நான் வருகிறேன் (போகிறான்) (**புத்தகங்களை அப்புறப்படுத்த நூல்நிலையத்தில் உள்ளவர்கள் அங்கும் இங்கும் ஓடுகிறார்கள்**)

தாதாராவ் :—ஏன் ஓடுகிறீர்கள்? என்ன பயம்! அவர்கள் வரட்டும். நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.

ராமராவ் :—வரட்டுமே! வந்தால் என்னை மிதித்துக் கொண்டுதான் அவர்கள் உள்ளே நுழைய வேண்டும்.

வெங்கடமகி :—நான் செத்தாலும் சரி! கல்விக்காகவும் கலைக்காகவும் நான் அவர்களோடு சண்டை போடாமலிருக்கப் போவதில்லை

(**எல்லோரும் இரைகிறார்கள்**)

தாதாராவ் :—ஏன் சத்தம்? சாந்தமாயிருங்கள். கண்டபடி பேச வேண்டாம். அவர்களை சமாளிக்க எனக்குத் தெரியும். நான் சொல்லும் சுவடிகளைக் கொண்டு வந்து என் மேஜையின் மேல் வரிசையாக வைத்து விட்டு உங்கள் உங்கள் வேலையைக் கவனியுங்கள் போதும். இடி விழுந்தாலும் சரி இடத்தை விட்டு அசையக்கூடாது. தெரிந்ததா.

(தாதாராவ் சொல்லியபடி எல்லோரும் செய்கிறார்கள். வாசலுக்கருகில் தாதாராவ் புத்தகங்களின் நடுவே உட்கார்ந்திருக்கிறார். வெளியே காலடி சத்தமும் இரைச்சலும் கேட்கிறது. எதிரிகளின் சிப்பாய்கள் வாசலுக்கு அருகில் நின்று ஜெனரல் ஸ்மித்துக்கும் நவாபிற்கும் வழி விடுகிறார்கள். இருவரும் உள்ளே நுழைந்து)

ஸ்மித் :—**(சுற்றிலும் பார்த்து)** பொருத்தமான இடம். இங்கிருந்தே ஊர் முழுவதையும் கொளுத்தி விடலாம். **(தாதாராவும் மற்றவர்களும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து)** அட! இவர்கள் யார்? பொம்மையைப்போல் இருக்கிறார்கள். தலையில் என்ன டர்பன்!

நவாப் :—என்ன கெர்வம் அவர்களுக்கு! மடையன்கள். மரியாதை இல்லை. எழுந்திருக்கக்கூடவில்லை. **(கத்தியை உருவுகிறான்)**

ஸ்மித் :—**(தாதாராவைப் பார்த்து)** யார் நீ!

தாதாராவ் :—தாங்கள் யார்? நமது அரசரின் உத்திரவில்லாமல் உள்ளே நுழையக்கூடாது.

ஸ்மித் :—ஓஹோ! அச்சா! உங்கள் அரசரா! அவர் எங்கிருக்கிறார் தெரியுமா! அவருடைய உத்திரவு வேண்டுமா! **(அசட்டுச் சிரிப்பு)**

நவாப் :—**(தாதாராவிடம் சென்று)** இப்போ நான்தான் உன்னுடைய அரசன். கனவா காண்கிறாய்!

தாதாராவ் :—ஆம்! நூற்றுக்கணக்கான வருஷங்களாக நாங்கள் இந்த மகாலில் கனவுகள்தான் பார்க்கிறோம். நம்முடைய கனவெல்லாம் நினைவாகிறதே தவிர வேறில்லை. எத்தனையோ அரசர்களும் சிப்பாய்களும் வந்து போய் விட்டார்கள். எத்தனையோ ராஜ்யங்கள் தோன்றி மறைந்து விட்டன. ஆனால் நாம் என்றும் இருக்கிறோம்.

நவாப் :—என்ன இறுமாப்பு! துரத்து எல்லோரையும் வெளியே. இங்கேயுள்ள இந்த கூளங்குப்பைகளை யெல்லாம் கொளுத்து

(ஒரு சிப்பாய் ஓடிப்போய் ஒரு சுவடியைக் கையில் எடுக்கிறான்)

தாதாராவ் —உஷார்! அதைத் தொடுவாயாகில் உனக்கே ஆபத்து. சார்! இதைப் படித்துப் பாருங்கள். பிறகு என்ன வேண்டுமானாலும் செய்யலாம். **(ஒரு கடிதத்தை ஸ்மித்திடம் கொடுக்கிறார்.)**

ஸ்மித்:—(படித்துப் பார்த்து ஆச்சரியத்தோடு) அட! கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்க்ஸ் அவர்களுடைய கடிதம் அல்லவா இது! இங்கே எப்படி வந்தது!

தாதாராவ்;—ஆம்! அவருடையது தான்! உங்கள் சிப்பாய் கையில் எடுத்திருக்கிறனே அந்தச் சுவடியின் நகல் வேண்டும் என்று எழுதியிருக்கிறார். அதைக்கொளுத்தி விட்டால் உங்களுக்கே ஆபத்து! வேறென்ன!

ஸ்மித்:—ஹேஸ்டிங்க்ஸ் ஒரு விசித்திரமான மனிதன். கிரந்தம் என்றால் அவருக்கு ரொம்ப ஆசை. (சுவடியைப் பார்த்து) இந்த அட்டைப்படம் அவருக்காக எழுதப்பட்டதா என்ன? இவ்வளவு பளபளப்பாகவும் அழகாகவும் இருக்கிறதே!

நவாப்:—ஆம். புதிதாகத் தோன்றுகிறது. இப்போதான் எழுதியிருக்கிறார்கள். (சுவடியைப் பார்க்கிறார்)

தாதாராவ்:—(சிரித்துக் கொண்டே) புதிதாகத்தான் தோணும். ஆனால் அது 150 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டது.

ஸ்மித்:—My god! ஆச்சரியம் தான் இது! சரி. இதைக் கொளுத்த வேண்டாம். இது மட்டும் இருக்கட்டும். ஆனால் மற்றவைகளை யெல்லாம் இன்றே எடுத்து விட வேண்டும். இந்த இடம் எங்களுக்கு வேண்டும்.

நவாப்:—ஜெனரல் ஸ்மித்! இப்படி பேசிக் கொண்டிருப்பதில் என்ன லாபம்! (சிப்பாய்களைப் பார்த்து) எல்லாவற்றையும் தூக்கி வெளியே எறி. உம். சீக்கிரம். (சிப்பாய் ஒருவன் ஒரு சுவடியை எடுக்கிறான்.)

தாதாராவ்:—மீண்டும் நான் தடுக்க வேண்டி நேரிடுகிறது. ஒப்பு இல்லாத சுவடி இது! நவாப் சாப்! இதோ இந்த கடிதத்தைப் பாருங்கள். (மேஜையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்து) பர்சியா தேசத்து ஷாவின் கடிதம். அம்பர் ஹுஸேன் எழுதிய பகவத்கீதையின் விரிவுரைக்கு நகல் கேட்டிருக்கிறார். அந்தச் சுவடியை நவாப் எடுத்தெறிந்து விட்டதாக ஷாவுக்கு எழுதலாமா!

நவாப்:—(கடிதத்தை வாசித்துத் தோள்களை அசைத்து) இது ஷாவின் கடிதம் தான். இதை வேண்டுமானாலும் வைத்துக் கொள். மற்றதை யெல்லாம் வாரி எறிய வேண்டியது தான். (தன் ஆட்களுக்கு மறுபடியும் உத்திரவிடுகிறார்.)

தாதாராவ்:—நவாப் ஸாப்! கொஞ்சம் பொறுங்கள். எதை எறியச் சொல்லுகிறீர்கள். (ஒரு புத்தகத்தை எடுத்து) இது குரான்! (மற்றொன்றை எடுத்து) இது கஜினி முகம்மதின் ஜீவிய சரித்திரம். இதெல்லாம் எறியலாமா.

நவாப்:—(அந்தப்புத்தகங்களைக் கையில் வாங்கிக்கொண்டு) அப்படியா! இருக்கட்டும். என் தகப்பனாரைக் கேட்கவேண்டும். குரான்!... கஜினிசரித்திரம் (சிப்பாயைப்

பார்த்து) இந்தப் பெயர்களை எழுதிக்கொள். *(அவன் எழுதுகிறான்)* குரான்! கஜினி சரித்திரம்.

தாதாராவ் :—அப்படியென்றால் இவை இங்கே இருக்கட்டும். ஆனால் இதை என்ன செய்யலாம். *(ஒரு புத்தகத்தை எடுத்து ஸ்மித்தினிடம் கொடுக்கிறார்.)*

ஸ்மித் :—*(ஆச்சரியத்தோடு)* பைபிள்! எப்படி வந்தது இங்கே!

தாதாராவ் :—*(அப்புத்தகத்தில் ஒரு பக்கத்தைப் புரட்டி)* இதைப் படியுங்கள். சுவார்ட்ஸ் பாதிரியாரின் கையெழுத்து.

ஸ்மித் :—*(வாசித்து)* க்ரிஸ்டியென் ப்ரெடரிக் சுவார்ட்ஸ் துளஜா மகாராஜாவுக்கு அன்புடன் அளித்தது. பேஷ்! இது நம்முடைய வேத புத்தகம்.

தாதாராவ் :—நவாப் இதை எறிந்து விடச் சொல்லுகிறாரா?

நவாப் :—என்ன அது? யாரது சுவார்ட்ஸ்?

ஸ்மித் :—ஆம் எனக்குத் தெரியும் அவரை. டென்மார்க் தேசத்து சிறந்த பாதிரி. சில வருஷங்களுக்கு முன் கவர்னர் ரம்போல்டு அவரைத்தான் ஹைதரிடம் சமாதானத்திற்காக தூது அனுப்பினார். சரி! இதை வேண்டாமென்று யார் சொல்லுவார்?

தாதாராவ் :—நான் மாட்டேன்.

நவாப் :—நானும் சொல்லமாட்டேன்.

தாதாராவ் :—*(இன்னொரு சுவடியை எடுத்து)* இதில் வெடி மருந்து செய்யும் முறை சொல்லியிருக்கிறது. நாகப்பட்டினத்தில் இருக்கும் டச்சுக்காரருக்காக நகல் எழுதிக் கொண்டிருக்கிறார். *(நகர்ந்துகொண்டே மற்றொன்றை எடுத்து)* இது விஷ வாயுவைப்பற்றிக் கூறும்.

ஸ்மித் :—க்ரந்தத்தில் இதெல்லாமா இருக்கிறது.

தாதாராவ் :—*(நகர்ந்துகொண்டே ஒரு சுவடியைக் காண்பித்து)* இது பைத்திய வாயுவைத் தயாரிக்கும் முறையைச் சொல்லுகிறது. இந்த வாயுவை உபயோகித்தால் ஜனங்களுக்குப் பைத்தியம் பிடிக்கும்.

ஸ்மித் :—ஆச்சரியம்தான்! ஆமாம்! நெடுநாள் நாம் இந்தக் கோட்டையை முற்றுகையிட்டோமே. அப்பொழுது ஏன் நீங்கள் இந்த வாயுவை உபயோகிக்கவில்லை.

தாதாராவ் :—(அமைதியாகவும் தைரியமாகவும்) இது பைத்தியமில்லாதவர்களைப் பைத்தியமாக்குமே தவிர ஏற்கனவே பைத்தியம் பிடித்தவர்களை இன்னும் அதிக பைத்தியமாக்காது. ஆகையால்தான் உபயோகிக்கவில்லை.

நவாப் :—சட்! என்ன குத்தலான பேச்சு!

ஸ்மித் :—பரவாயில்லை. ஹாஸ்யமாகப் பேசுகிறார்.

தாதாராவ்:—(வேகமாக நகர்ந்து) இது ஒரு அபூர்வமான ஜோதிடநூல். ஜெர்மனிக்காக இவர் நகல் தயாரிக்கிறார். இதன் கடைசி பக்கத்தில் இந்த ஊரின் எதிர்காலம் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

ஸ்மித் :—இருக்கட்டும். உம்! (கனைத்துக் கொண்டு) இதை சோதிப்போம். 1773-ல் தஞ்சாவூரைப்பற்றி என்ன சொல்லுகிறது!

தாதாராவ் :—(வாசிக்கிறார்) கி. பி. 1773-ம் வருஷத்திலிருந்து 3 வருஷகாலத்திற்குத் தஞ்சாவூரை முகம்மதியர்கள் ஆளுவார்கள். அதன் பிறகு மறுபடியும் மராட்டியர்கள் அரசராவார்கள்.

நவாப் :—(உரத்த குரலில்) அது பொய். இனி மராட்டியர்கள் இங்கே இருக்கவே முடியாது.

ஸ்மித் :—நவாப்! சற்றுப் பொறுங்கள். மூன்ஷி! மேலே படி.

தாதாராவ் —1773-ம் வருஷத்திலிருந்து 3 வருஷங்கள் வரையில் தஞ்சாவூரை முகம்மதியர்கள் ஆளுவார்கள். அதன் பிறகு மறுபடியும் மராட்டியர்கள் அரசராவார்கள். பிறகு வெள்ளையர்கள் அதிகாரம் ஓங்கி ஏழு கடல்களுக்கப்பாலுள்ள அவர்களுடைய அரசர் இந்த நாட்டை ஆளுவார்.

ஸ்மித் :—ரொம்பசரி! ரொம்பசரி! மேலே படி.

தாதாராவ் :—சுமார் 170 வருஷங்களுக்குப் பிறகு வெள்ளையர்கள் இந்தியாவை விட்டுப்போக நேரிடும். பின்பு இந்திய மக்களே நாட்டை ஆளுவார்கள்.

ஸ்மித் :—அது என்னமோ சந்தேகம். இருக்கட்டும். அந்த நாளைப் பற்றி இப்போ என்ன கவலை. மற்றதெல்லாம் சரியாக இருக்கிறது. ஆச்சரியப்படக்கூடிய விஷயம் தான்.

நவாப் :—உண்மை. நான்கூட என் தகப்பனாரை இங்கே அழைத்துக் கொண்டு வந்து எல்லாவற்றையும் காண்பிக்க வேண்டும்.

ஸ்மித் :—நானும் என் மனைவியை அழைத்து வந்து எல்லாவற்றையும் காண்பிக்கவேண்டும். இதுகளெல்லாம் பார்க்க அவளுக்கு ஆசையாக இருக்கும். இங்கே நான் பார்த்தவைகளைப் பற்றி கவர்னருக்கும் ஒரு கடிதம் எழுதுகிறேன்.

நவாப்:—நான் என் தந்தைக்கு எழுதி இதுகளை என்ன செய்யலாம் என்று கேட்க வேண்டும். எது அது? குரான்...மற்றொன்று.

சிப்பாய்:—(குறிப்பைப் பார்த்து) குரான்—கஜினிமுகம்மதின் ஜீவிய சரித்திரம்.

நவாப்:—ஆம். குரான்! கஜினியின் ஜீவிய சரித்திரம்.
(மறுபடியும் சொல்லத்தடுமாறுகிறான்.)

தாதாராவ்:—கஜினி முகம்மதின் ஜீவிய சரித்திரம்.

நவாப்:—ஆம். ஆம். எனக்குத் தெரியும். இங்கே எல்லாமே ஆச்சரியம் தான். என் தந்தை இவைகளைப் பார்க்க ஆசைப்படுவார்.

தாதாராவ்:—சந்தேகமென்ன! எல்லாரையும் எப்போதும் அன்புடன் வரவேற்க சித்தமாக இருக்கிறோம்.

காட்சி 2.

[சென்னையிலிருந்த ஆங்கிலேயர்கள் கர்னாடக நவாபுடன் சேர்ந்து தஞ்சையைக் கைப் பற்றியதை இங்கிலாந்திலிருந்த கம்பெனி டைரெக்டர்கள் கண்டித்தனர். கி. பி. 1776ல் துளஜா ராஜா மறுபடியும் சிம்மாதனம் ஏறினார். தஞ்சை குதூகலமாக காட்சி அளிக்கிறது. துளஜா ராஜா தஞ்சைக்கு வந்ததும் முதலில் சரஸ்வதி மகாலுக்கு விஜயம் செய்வதாக திட்ட மிட்டார். அதை அறிந்த தாதாராவ் அரசர் உட்காருவதற்கென உயர்ந்த மேடையொன்றை அலங்கரித்து வைத்தார். ஆனால் அரசர் சரஸ்வதி மகாலில் நுழைந்ததும் தாதாராவ் பக்கத் திலேயே அமருகிறார்]

துளஜா:—என் அன்புமிகுந்த தாதா! உம்முடைய பெருமையே பெருமை.

தாதாராவ்:—இல்லை மகாராஜ்! அரசருக்கு சேவை செய்யும் பெருமையைத் தவிர எனக்கு வேறென்ன பெருமை.

துளஜா:—நீங்கள் மிகவும் பொறுமைசாலி. சாந்தியின் ஸ்வரூபம். சென்னை கவர்னர் லார்ட் பிகட் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். படித்துப் பாருங்கள்—உங்களைப்பற்றி எவ்வளவு பெருமையாக எழுதியிருக்கிறார்!

தாதாராவ்:—(கடிதத்தை எடுத்து வாசித்து) மகாராஜ்! இவ்வளவு பெருமைக்கு நான் அருகனல்ல. என்றால் இதை சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. (கடிதத்தைக் கொடுக்கிறார்)

துளஜா:—நல்லது. சேனாதிபதி மானோஜி படிப்பார். எல்லோருக்கும் இந்தக்கடிதம் தெரிந்திருக்கவேண்டும்.

மாஜேஜி :—(*முன்வந்து கடிதத்தை வாங்கி வாசிக்கிறார்*) இந்தக்கடிதத்தை முடிக்கு முன் தங்களுடைய சரஸ்வதிமகால் அதிகாரிக்கு எனது தாழ்மையான வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அங்கு நான் இருந்த பொழுது அவரைச் சந்திக்கும் பாக்கியம் எனக்கு இல்லாமற் போயிற்று. ஆனால் கி. பி. 1773-ல் ஜெனரல் ஸ்மித் அவரைப்பற்றி மிகவும் புகழ்ந்து ஒரு கடிதம் எனக்கு எழுதியிருக்கிறார். தங்களுடைய ராஜ்யத்தில் மரியாதைக்குரிய மகாபுருஷர் என்று ஸ்மித் எழுதுகிறார். கல்வி பலத்தாலும் கலை பலத்தாலும் மிருக பலத்தை எப்படி நசுக்க முடியும் என்பதை பண்டிட் தாதாராவ் தன்னுடைய நுண்ணறிவால் விளக்கியுள்ளார் என்றே நான் நினைக்கிறேன். அவர் தன்னுடைய பெருந்தன்மையினால் உங்களுடைய கலைப் பொக்கிஷத்தைக் காப்பாற்றியதோடு நில்லாமல், பல நூறு வருடங்களாக ஓங்கி வளர்ந்துவந்த இந்திய கலாசாரத்தை அழித்துவிட்டார்கள் என்ற அபகீர்த்தியும் பழியும் ஆங்கிலேயர்களைச் சூழாத வண்ணம் எங்களையும் காப்பாற்றியிருக்கிறார் என்று சொல்லவேண்டும். யுத்தம் என்பது ஒரு பைத்திய புத்தியின் விளைவென்றும் அதை உங்களிடமிருக்கும் பைத்திய வாயுவினால் கூட குணப்படுத்த முடியாது என்றும் அவர் கூறியதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன்.”...